நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பரமக்குடி.

முன்னிலை. திரு.எஸ்.பிரசாத்,பி.எஸ்.சி.,பி.எல்.,
நீதித்துறை நடுவர்,
பரமக்குடி.

2017 -ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 -ம் நாள்

முன்பதிவேட்டு வழக்கு எண். 01 / 2017

தமிழக அரசுக்காக காவல் ஆய்வாளர்
எமனேஸ்வரம் காவல் நிலையம்,

நிலைய குற்ற எண் 161 / 2016 ... குற்ற முறையிடுவோர்

.. எதிர் ..

1) சண்முகசேகர்,
வயது 44/2016,
த/பெ. காரி,
காந்திநகர், எமனேஸ்வரம்.

2) காரி,
வயது 68/2016,
த/பெ.பெருமாள்,
காந்திநகர், எமனேஸ்வரம்

3) மண்டியம்மாள்,
வயது 65/2016,
க/பெ.காரி,
காந்திநகர், எமனேஸ்வரம்.

4) தனலெட்சுமி,
வயது 43/2016,
க/பெ.சண்முகசேகர்,
காந்திநகர், எமனேஸ்வரம்,

5) அகிலா,
வயது 23/2016
த/பெ.சண்முகசேகர்,
காந்திநகர், எமனேஸ்வரம்.

6) அபர்ணா,
வயது 19/2016
த/பெ.சண்முகசேகர்,
காந்திநகர், எமனேஸ்வரம்.

... எதிரிகள்

பிரிவுகள் 147,148,294(b), 323, 324, 307, 302 r/w 149 IPC

இந்த வழக்கானது 10.02.2017 - ம் தேதி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குற்ற முறையிடுவோர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் R.சரவணக்குமார் அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்தது இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

இந்த வழக்கில் எதிரிகளால் கொலை செய்யப்பட்ட முத்து என்பவர் ஓய்வு பெற்ற ஆசிரியர், புகார்தாரரின் மாமனார் ஆவார் என்றும், 1வது எதிரி சண்முகசேகர், 2வது எதிரி காரி 1வது எதிரியின் தகப்பனார், 3வது எதிரி மண்டியம்மாள், 1வது எதிரியின் தாயார், 4 வது எதிரி தனலெட்சுமி, 1வது எதிரியின் மனைவி, 5வது எதிரி அகிலா, 6வது எதிரி அபர்ணா ஆகிய இருவரும் 1 மற்றும் 4 ஆகிய எதிரிகளின் பிள்ளைகள் ஆவார்கள்.

1. இந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்த வழக்கில் 1வது எதிரி தம்பி கேசவன் என்வருக்கும் கொலை செய்யப்பட்ட முத்துவின் மகளான சரவணபிரியாவை திருமணம் செய்து கொடுத்துள்ளார் என்றும், கடந்த இரண்டு ஆண்டுகளாக 1வது எதிரிக்கும் அவரது தம்பிக்கும் வீடு கட்டுவதில் முன் விரோதம் இருந்து வந்துள்ளது என்றும், 28.09.2016ம் தேதியன்று இரவு சுமார் 08.40 மணியளவில் 1வது எதிரிக்கும், அவரது தம்பிக்கும் அவர்களது வீட்டிற்கு மின்சார கட்டணம் செலுத்துவது தொடர்பாக காந்திநகரில் உள்ள கேசவன் வீட்டின் முன்புறத்தில் வாய்தகராறு ஏற்பட்டு சண்டை சத்தம் கேட்டு புகார்தாரரும் அவரது மாமனாரான முத்துவும் அந்த இடத்திற்கு சென்று உள்ளார் என்றார்.

3. மேற்படி 1 முதல் 7 எதிரிகளும் அபாயகர ஆயுதங்களான அரிவாள், இரும்பு கம்பி, கம்பு ஆகியவைகளுடன் சட்ட விரோதமாக ஒன்று கூடி சண்டையை தடுக்க வந்த முத்துவையும், புகார்தாரரையும் கொலை செய்யவும் மற்றவர்களை அடித்து காயப்படுத்த வேண்டும் என்ற பொதுவான நோக்கத்துடனும் வந்து குற்றமுறு சதி செய்துள்ளீர்கள்.

4. மேற்படி 1 முதல் 6 எதிரிகளாகிய நீவீர் கேசவனை கம்பாலும், கைகளாலும் அடித்து சண்டைபோட்டுக் கொண்டிருந்ததை பார்த்து புகார்தாரரும் முத்துவும் கேசவனிடம் அசிங்கமாக பேசி 2 வது எதிரியுடன் சண்டை போட்டுள்ளனர் என்றும், உடனே 1 மற்றும் 2 வது எதிரிகளாகிய நீவீர் எதிரியில் உள்ள அவர்களது பழைய ஓட்டு வீட்டுக்குள் சென்று ஆளுக்கொரு அபாயகரமாக ஆயுதமான அருவாளை எடுத்து வந்து ஏன்டா தேவடியா மகன்களா எங்கேடா வந்தீங்க உங்களை தாண்டா முதலில் வெட்டனும் இத்தோட செத்து தொலைடா என்று சொல்லி 1வத எதிரி சண்முகசேகர் தனது கையில் வைத்திருந்த அபாயகரமான ஆயுதமான அரிவாளால் முத்துவின் தலையில் ஓங்கி வெட்டினார் என்றும், பின்னர் முத்துவுக்கு ரத்தக்காயம் ஏற்பட்டு கீழே விழுந்தவுடன், மேற்படி எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து முத்துவின் நெஞ்சிலும், வயிற்றிலும் உடம்பிலும் மாறி, மாறி கால்களால் மிதித்து கொலை செய்துள்ளனர் என்றும், அப்போது அங்கு கீழே கிடந்த முத்துவை புகார்தாரர்

தூக்கிய போது 2வது எதிரியாகிய நீர் தனது கையில் வைத்திருந்த அபாயகர ஆயுதமான அருவாளால் இவனை கொண்டா தாண்டா நல்லது செத்து தொலைடா தேவடியா மகனே என்று சொல்லி அவரது வலது பக்க நடு தலையில் வெட்டி சிதைந்த காயம் ஏற்படுத்தியும் 1வது எதிரி வைத்திருந்த அரிவாளால் புகார்தாரரின் வலது முழங்கையில் வெட்டி வீக்கமும், சிராய்ப்பு காயம் ஏற்படுத்தியும் 3வது எதிரியாகிய நீர் தன் கையில் வைத்திருந்த அபாயகர ஆயுதமான இரும்பு கம்பியால் புகார்தாரரின் முதுகில் அடித்து சிராய்ப்பு காயம் ஏற்படுத்தியுள்ளீர் என்றும், அப்போது அங்கு ஓடி வந்த சரவணபிரியாவை 4 முதல் 6 எதிரிகளும் சேர்ந்து கைகளால் அடித்தும், அவரது தலைமுடியை பிடித்து இழுத்தும், தாலிக்கயிறை இழுத்து கீழே தள்ளி நெஞ்சில் ஏறி மிதித்தும் இடது பக்க முன் கையிலும் வலது பக்க மேல் கையிலும் வீக்க காயங்களும், தாலி கயிற்றால் இறுக்கப்பட்டதால் வலது பக்க காரை எழும்புக்கு கீழ் கோடு போன்ற ஒரு காயம் வலது பக்க நெஞ்சு பகுதி வரை எற்படுத்தி உள்ளனர் என்றும், எனவே மேற்படி எதிரிகளில் 1வது எதிரியின் மீது பிரிவுகள் 147,148,294(b), 324, 302 இதச படியும், 2 வது எதிரியின் மீது பிரிவுகள் 147,148,294(b), 307 மற்றும் 302 r/w 149 இதச படியும், 3 வது எதிரியின் மீது பிரிவுகள் 147,148, 324 மற்றும் 302 r/w 149 இதச படியும், 4,5,6 வது எதிரிகள் மீது பிரிவுகள் 147, 323 மற்றும் 302 r/w 149 இதச படியும் எனவே எமனேஸ்வரம் காவல் நிலைய ஆய்வாளர் எதிரிகளாகிய உங்கள் மீது தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார்.

இவ்வழக்கில் P.R.No.204/2016 Dated:13.10.2016-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 கு.வி.மு.ச.வின் படி இந்நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையானதும் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது,

5. இவ்வழக்கில் ஆவணங்களின் பரிசீலனை செய்து பார்க்கையில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 307, 302 r/w 149 ன் படியான குற்றச்சாட்டு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் தான் விசாரிக்கதக்கது என்பதால் வழக்கு விசாரணைக்காக இராமநாதபுரம் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு ஒப்படைவு செய்ய கு.வி.மு.ச. 209(அ) பிரிவின் கீழ் உத்தரவிடப்படுகிறது,

6. இவ்வழக்கின் எதிரிகள் வரும் 06.06.2017-ம் தேதி அன்று இராமநாதபுரம், மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு நேரிடையாக ஆஜராக வேண்டும் என்று கு.வி.மு.ச. பிரிவு 209(ஆ) பிரிவின் கீழ் உத்தரவிடப்படுகிறது,

7. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை இவ்வழக்கின் விசாரணைக்காக இராமநாதபுரம் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு ஒப்படைப்பு செய்ய கு.வி.மு.ச. பிரிவு 209(இ) பிரிவின் கீழ் உத்தரவிடப்படுகிறது.

8.	இந்த வழக்கு இராமநாதபுரம் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட விபரத்தினை அரசு வழக்கறிஞருக்கு தெரிவிக்க கு.வி.மு.ச. 209(ஈ) பிரிவின் கீழ் உத்தரவிடுகிறேன்.

9.	இவ்வழக்கின் இராமநாதபுரம் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து வாதாட வசதி உண்டா - இல்லையா என்று எதிரிகளிடம் வினவிய போது எதிரிகள் வசதி உண்டு என்றார்கள்.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் நேரடியாக கணினியில் வைத்து சரிபார்க்கப்பட்ட பின்னர் 2017ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பரமக்குடி

<u>கு.வி.மு.ச. 428 பிரிவின் படியான விபரம்</u>

| | |
|---|---|
| 1ம் எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 29.09.2016 |
| 1ம் எதிரி பிணையில் சென்ற நாள் | - |
| 2ம் எதிரி சரணடைந்த நாள் | 29.09.2016 |
| 2ம் எதிரி பிணையில் சென்ற நாள் | 05.01.2017 |
| 3ம் எதிரி சரணடைந்த நாள் | 29.09.2016 |
| 3ம் எதிரி பிணையில் சென்ற நாள் | 20.12.2016 |
| 4ம் எதிரி சரணடைந்த நாள் | 29.09.2016 |
| 4ம் எதிரி பிணையில் சென்ற நாள் | 20.12.2016 |
| 5ம் எதிரி சரணடைந்த நாள் | 17.11.2016 |
| 5ம் எதிரி பிணையில் சென்ற நாள் | 17.11.2016 |
| 6ம் எதிரி சரணடைந்த நாள் | 17.11.2016 |
| 6ம் எதிரி பிணையில் சென்ற நாள் | 17.11.2016 |
| எதிரிகள் மீண்டும் கைது செய்யப்பட்ட நாள் | இல்லை |

நீதித்துறை நடுவர்,
பரமக்குடி.